**களனி பல்கலைக்கழகம் - 2019**

**------------------------------------------**

## 1.1 மறுப்பு அபிப்பிராயம்

களனி பல்கலைக்கழகத்தின் 2019 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று மற்றும் அன்றுடன் முடிவுற்ற ஆண்டிற்குரிய நிதிச் செயலாற்றல் கூற்று, உரிமை மூலதனத்தில் மாற்றங்கள் கூற்று, அன்றுடன் முடிவுற்ற ஆண்டிற்குரிய காசுப் பாய்ச்சல் கூற்று மற்றும் நிதிக் கூற்றுக்களுடன் தொடர்புடைய குறிப்புக்கள், முக்கியமான கணக்கீட்டுக் கொள்கைகளினதும் ஏனைய விளக்கத் தகவல்களினதும் பொழிப்புக்களை உள்ளடக்கிய 2019 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக் கூற்றுக்கள் 1978 ஆம் ஆண்டின் 16 ஆம் இலக்க பல்கலைக்கழகங்கள் சட்டத்தின் 108(1) துணைப் பிரிவுடன் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் அரசியலைமைப்பின் 154(1) ஆம் உறுப்புரை மற்றும் 2018 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் ஏற்பாடுளுக்கு அமைவாக எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. பாராளுமன்றத்திற்கு அறிக்கையிடப்பட வேண்டுமென நான் கருதுகின்ற எனது கருத்துரைகளும் அவதானிப்புகளும் இந்த அறிக்கையில் காணப்படுகின்றன.

பல்கலைக்கழகத்தின் நிதிக் கூற்றுக்கள் பற்றி நான் கருத்தினை தெரிவிக்கவில்லை. மறுப்பு அபிப்பிராயத்திற்கான அடிப்படைப் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் முக்கியத்துவம் காரணமாக இந்நிதிக் கூற்றுக்கள் மீது கணக்காய்வு அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை என்னால் பெற்றுக்கொள்ள முடியாதுபோனது.

## 1.2 மறுப்பு அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இந்த அறிக்கையின் 1.5 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்கள் தொடர்பாக எனது அபிப்பிராயம் முனைப்பழியுள்ளதாக்கப்படுகின்றது.

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (இ.க.நி.) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். அந்நியமங்களின் கீழான எனது பொறுப்புக்கள் எனது அறிக்கையில் நிதிக் கூற்றுக்களின் கணக்காய்விற்கான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள் பகுதியில் மேலும் விபரிக்கப்படுகின்றன. எனது மறுப்பு அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவு பொருத்தமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகின்றேன்.

## 1.3 நிதிக் கூற்றுக்களிற்கான முகாமைத்துவத்தினதும் அந்த ஆளுகைக்கு உட்பட்ட தரப்பினர்களினதும் பொறுப்புக்கள்

இந்நிதிக் கூற்றுக்கள் இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களிற்கு இணங்க தயாரித்து சரியாகவும் நியாயமாகவும் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக் கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

நிதிக் கூற்றுக்களைத் தயாரிக்கும் போது, பல்கலைக்கழகத்தினை தொடர்ந்தியங்கும் இயலுமை பற்றி தீர்மானிப்பது முகாமைத்துவத்தின் பொறுப்பாக அமைவதுடன், முகாமைத்துவமானது பல்கலைக்கழகத்தை கலைப்பதற்கு கருதினால் அல்லது வேறு மாற்று வழி இல்லாவிட்டால் செயற்பாடுகளினை இடைநிறுத்த நடவடிக்கை எடுத்தால் தவிர தொடர்ந்தியங்கும் கணக்கீட்டு எண்ணக்கரு அடிப்படையினை பயன்படுத்துதல் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

பல்கலைக்கழகத்தின் நிதி அறிக்கையிடல் செயன்முறையை மேற்பார்வை செய்தல் அந்த ஆளுகைக்குட்பட்டதரப்பினர்களின் பொறுப்பாக உள்ளது.

2018 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டத்தின் 16(1) ஆம் துணைப் பிரிவின் பிரகாரம், பல்கலைக்கழகத்தின் வருடாந்த மற்றும் கால ரீதியான நிதிக் கூற்றுக்களை தயாரிக்கக் கூடியவாறு நிறுவனமானது அதன் அனைத்து வருமானங்கள், செலவினங்கள், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்களின் புத்தகங்கள் மற்றும் பதிவேடுகளை முறையாக பேணுதல் வேண்டும்.

## 1.4 நிதிக்கூற்றுக்களின் கணக்காய்விற்கான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள்

முழுமையாக நிதிக் கூற்றுக்களை மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ்வு கூற்றுக்களிலிருந்து விடுபட்ட ஒன்றாக நியாயமான உறுதிப்படுத்தல் ஒன்றிகை பெற்றுக்கொடுத்தல் மற்றும் எனது அபிப்பிராயம் அடங்கிய கணக்காய்வு அறிக்கையினை வெளியிடல் எனது நோக்கமாகும். சாதாரண உறுதிப்படுத்தலானது உயர் மட்டத்திலான உறுதிப்படுத்தலாக விளங்குகின்ற போதிலும், இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு இணங்க நிதிக்கூற்றுக்களின் கணக்காய்வை மேற்கொள்ளும் போது மறுப்பு அபிப்பிராயத்திற்கான அடிப்படைப் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களினை வெளிப்படுத்திக் கொண்டதாகக் கருத முடியாது. மோசடி அல்லது தவறு தனியாக அல்லது திரண்டதாக தாக்கம் செலுத்துவதன் காரணமாக இந்நிதிக்கூற்றுக்கள் மீது மறுப்புக்கள் எற்படக் கூடியதாக உள்ளதுடன், இந்த நிதிக் கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பயனர்களினால் மேற்கொள்ளப்படுகின்ற பொருளாதார தீர்மானங்கள் தொடர்பில் தாக்கமொன்று எற்படலாமென எதிர்பார்க்கப்படுகின்றது.

என்னால் தொழில்சார் தீர்ப்பு மற்றும் தொழில்சார் சந்தேகத்திற்கிடமான முறை என்பவற்றின் பிரகாரம் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வு செய்யப்பட்டது. மேலும்,

- மோசடிகள் அல்லது தவறுகள் காரணமாக நிதிக் கூற்றுக்களில் ஏற்படக் கூடிய பொருண்மையான பிறழ்வு கூற்றுக்களின் ஆபத்தான தன்மையினை இனங்காணும் போதும் மற்றும் மதிப்பீடு செய்யும் போதும் இடத்திற்குப் பொருத்தமானவாறு உரிய கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடுவதன் ஊடாக மோசடிகள் அல்லது தவறுகள் காரணமாக ஏற்படக் கூடிய ஆபத்தினை தவிர்த்துக் கொள்வதற்கு, போதிய மற்றும் பொருத்தமான கணக்காய்வு சான்றாதாரங்களை பெற்றுக்கொள்ளல் எனது அபிப்பிராயத்திற்கான அடிப்படையாகும். பொருண்மையான பிறழ்வு கூற்றுக்களின் மூலம் ஏற்படக் கூடிய தாக்கங்களை விடவும் மோசடி ஒன்றின் மூலம் ஏற்படக் கூடிய தாக்கங்கள் பாரியதாகக் காணப்படுவதுடன், தவறான கூட்டணிகள், போலியான ஆவணங்களைத் தயாரித்தல், வேண்டுமென்றே தவிர்த்தல் அல்லது உள்ளகக் கட்டுப்பாடுகளைத் தவிர்த்தல் என்பன மோசடியொன்று ஏற்படுவதற்குக் காரணமாக அமையும்.

- உகந்தவாறு உரிய கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடும் பொருட்டு பல்கலைக்கழகத்தின் உள்ளக நிருவாகம் தொடர்பான விளக்கமொன்றினைப் பெற்றுக்கொண்ட போதிலும், உள்ளக நிருவாகத்தின் செயற்திறன் பற்றிய கருத்து ஒன்றினை வெளியிடுவதற்கு எதிர்பார்க்கவில்லை.

- முகாமைத்துவத்தினால் பயன்படுத்திய கணக்கீட்டுக் கொள்கைகளின் மற்றும் கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத்தன்மை மற்றும் முகாமைத்துவத்தினால் மேற்கொள்ளப்பட்ட தொடர்புடைய வெளிப்படுத்தல்களின் பொருத்தப்பாடு தொடர்பாக பாராட்டப்பட்டது.
- சம்பவங்கள் அல்லது தன்மைகள் காரணமாக பல்கலைக்கழகத்தின் தொடர்ந்தியங்கும் தன்மை பற்றிய தகுதி வாய்ந்த நிச்சயமற்ற தன்மையொன்று காணப்படுகின்றனவா என்பன தொடர்பில் பெற்றுக்கொண்ட கணக்காய்வு சான்றாதாரங்களை அடிப்படையாகக் கொண்டு கணக்கீட்டிற்காக

பல்கலைக்கழகத்தின் தொடர்ந்தியங்கும் தன்மை பற்றிய அடிப்படையினை ஈடுபடுத்துவதற்கான தொடர்புத்தன்மை பற்றி தீர்மானிக்கப்பட்டது. குறிப்பிடத்தக்க நிச்சயமற்ற தன்மையொன்று நிலவுவதாக நான் கருதும் பட்சத்தில் நிதிக் கூற்றுக்களில் அது பற்றிய வெளிப்படுத்தல்களுக்கு எனது கணக்காய்வு அறிக்கையில் கவனம் செலுத்த வேண்டியுள்ளதுடன், அந்த வெளிப்படுத்தல்கள் போதியதாக இல்லாத பட்சத்தில் எனது கருத்தினை திருத்தம் செய்தல் வேண்டும். எவ்வாறாயினும், எதிர்கால நிகழ்வுகள் அல்லது தன்மைகளின் மீது தொடர்ந்தியங்கும் தன்மை முற்றுப்பெறலாம்.

- வெளிப்படுத்தல்களை உள்ளடக்கிய நிதிக் கூற்றுக்களின் விளக்கமளித்தல்கள், கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கம் என்பன மதிப்பீட்டிற்கு உட்படுத்தியதுடன், அதற்கு அடிப்படையாக அமைந்த கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் சம்பவங்கள் பொருத்தமான மற்றும் நியாயமான முறையில் நிதிக் கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்டுள்ளமை தொடர்பாக பாராட்டப்பட்டது.

இயன்றளவு மற்றும் தேவையான அனைத்துச் சந்தர்ப்பங்களிலும் பின்வருவனவற்றை பரீட்சிப்பதற்கு சாத்தியமானதாகவும் அவசியமானவாறும் கணக்காய்வின் நோக்கெல்லை விஸ்தரிக்கப்பட்டுள்ளது.

- தகவல்களை சமர்ப்பித்தல் தொடர்பாக கவனம் செலுத்தும் போது நிலையத்தின் பணிகளை தொடர்ச்சியாக மதிப்பீடு செய்யக் கூடியவாறு அதன் அமைப்பு, முறைமைகள், நடைமுறைகள், ஏடுகள், பதிவேடுகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் முறையாகவும் போதுமானதாகவும் வடிவமைக்கப்பட்டிருந்தனவா என்பதும், அத்தகைய முறைமைகள், நடைமுறைகள், புத்தகங்கள், பதிவேடுகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் ஆக்க" ர்வமான செயற்பாட்டில் உள்ளனவா என்பதும்,

- யாதேனுமொரு எழுத்து மூலமான சட்டம் அல்லது நிலையத்தின் பணிப்பாளர் சபையினால் வெளியிடப்பட்ட விசேட கட்டளை தொடர்பாக இணங்கியிருந்ததா என்பதும்,

- தமது அதிகாரங்கள், தொழிற்பாடுகள் மற்றும் கடமைகளின் பிரகாரம் செயற்பட்டிருந்தனவா என்பதும்,

- வளங்கள் கால வரையறைகளின் உள்ளேயும் பொருத்தமான சட்டங்களிற்கு இணங்கவும் சிக்கனமாகவும் வினைத்திறனாகவும் ஆக்க" ர்வமாகவும் கொள்வனவு செய்யப்பட்டு பயன்படுத்தப்பட்டிருந்தனவா என்பதும் ஆகும்.

## 1.5 நிதிக் கூற்றுக்கள்

### 1.5.1 நிதிக் கூற்றுக்களின் தயாரிப்பு மீதான உள்ளகக் கட்டுப்பாடு

முகாமைத்துவத்தின் பொதுவான அல்லது குறித்துரைக்கப்பட்ட அங்கீகாரத்துடன் கொடுக்கல் வாங்கல்கள் மேற்கொள்ளல், பொருத்தமான அறிக்கையிடல் நியமங்களிற்கிணங்க நிதிக்கூற்றுக்கள் தயாரிக்கப்படுவதை அனுமதிப்பதற்கும் சொத்துக்களிற்கான கணக்களிப்பொறுப்பை பேணுவதற்கும் தேவையானவாறு கொடுக்கல் வாங்கல்கள் பதிவு செய்தல், முகாமைத்துவத்தின் பொதுவான அல்லது குறித்துரைக்கப்பட்ட அதிகாரத்தின் பிரகாரம் மாத்திரமே சொத்துக்களை அணுகுவதற்கு அனுமதித்தல், பதிவு செய்யப்பட்ட சொத்துக்களிற்கான கணக்களிப்பொறுப்பு ஏற்கனவேயுள்ள சொத்துக்களுடன் நியாயமான கால இடைவெளிகளில் ஒப்பீடு செய்தல், ஏதாவது வேறுபாடுகள் தொடர்பாக பொருத்தமான நடவடிக்கை எடுத்தல் என்பன நியாயமான உறுதிப்பாட்டை வழங்குவதற்கு போதுமான உள்ளகக் கணக்கீட்டுக் கட்டுப்பாட்டு முறைமையொன்றை "திட்டமிட்டு பேணுதல்" நிறுவனத்திற்குத் தேவையாக உள்ளது.

## 1.5.2 இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்காமை

பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்படுகின்றன.

| குறித்த தரத்திற்கான குறிப்புடன் இணங்காமை | | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | இலங்கை பொதுத் துறை கணக்கீட்டு நியமம் 07 இன் 49 ஆம் பந்தியின் பிரகாரம் ஆதனங்கள் பொறித் தொகுதி மற்றும் உபகரணங்கள் என்பவற்றினை மீள் மதிப்பீடு செய்யும் போது அந்த சொத்து உரித்தான ஆதனங்கள்ஈ பொறித் தொகுதிகள் மற்றும் உபகரணங்கள் என்பவ்றறினை முழுமையாக மீள் மதிப்பீடு செய்ய வேண்டியுள்ள போதிலும், பெறுமதி ரூ.127,033,367 பெறுமதியான காணி மற்றும் கட்டிடங்கள் என்பன மீள் மதிப்பீடு செய்யப்பட்டிருக்கவில்லை. அவ்வாறே இந்த மீள் மதிப்பீடு செய்யப்படாத காணி மற்றும் கட்டிடங்களின் பெறுமதி நிதிக் கூற்றுக்களிலும் உள்ளடக்கப்பட்டிருக்கவில்லை. | எதிர்வரும் காலங்களில் சீராக்கம் செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | இலங்கை அரசதுறை கணக்கீட்டு நியமங்களின் பிரகாரம் நவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (ஆ) | மீளாய்வு ஆண்டினுள் காணி மற்றும் கட்டிடம் ஏதும் அகற்றாது இருந்த நிலையில் இலங்கை பொதுத் துறை கணக்கீட்டு நியமம் 07 இன் 55 ஆம் பந்தியின் பிரகாரம் மீள் மதிப்பீட்டு மிகை கணக்கிலிருந்து ரூ.135,602,989 பெறுமதியான தொகை நிதி செயலாற்றுகை கூற்றிற்கு பொருந்தாத வகையில் குறிப்பிடப்பட்டிருந்தது. எனவே மீளாய்வு ஆண்டிலே மிகை மற்றும் மீள் மதிப்பீட்டு இருப்பு முறையே அத்தொகையால் அதிகரித்தும் குறைத்தும் காட்டப்பட்டிருந்தது. | கணக்கீட்டு நியமங்களை மீண்டும் ஆராய்ந்து அடுத்த கட்ட நடவடிக்கைகளைமேற்கொள்வதற்கு ஆலோசனை வழங்கப்பட்டுள்ளது. | இலங்கை அரசதுறை கணக்கீட்டு நியமங்களின் பிரகாரம் நவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (இ) | இலங்கை பொதுத் துறை கணக்கீட்டு நியமம் 7 இன் பிரகாரம் நிலையற்ற நிலையான சொத்துக்களை அந்த சொத்துக்களின் தன்மை மற்றும் தொழிற்பாட்டு நடவடிக்கைகளுக்கு பயன்படுத்துகின்ற விதம் | 2020 ஆம் ஆண்டிலே நிதிக் கூற்றுக்களைத் தயாரிக்கும் போது சீர் செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | இலங்கை அரசதுறை கணக்கீட்டு நியமங்களின் பிரகாரம் நவடிக்கை எடுத்தல் வேண்டும். |

என்பவற்றின் பிரகாரம் வகைப்படுத்தி ஒவ்வொரு சொத்துக்குரிய வகுப்பின் தொழிற்படு ஆயுட்காலத்திற்கு ஏற்ப பெறுமானத் தேய்வு செய்வதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். எனினும் பல்கலைக்கழகத்தின் தளபாடங்கள், உபகரணங்கள் மற்றும் இலத்திரனியல் கருவிகள் என்பன அவற்றின் தன்மை மற்றும் தொழிற்படு ஆயுட்காலம் என்பவற்றினை கவனத்திற் கொள்ளாது தளபாடங்கள் மற்றும் உபகரணங்கள் என ஒரே சொத்து வகுப்பின் கீழ் வகைப்படுத்தப்பட்டிருந்தது. அவ்வாறே இலத்திரனியல் உபகரணங்களை பெறுமானத் தேய்வு செய்யும் வீதமானது வருடத்திற்கு நூற்றிற்கு 20 சதவீதம் மேற்கொள்வதாக நிதிக் கூற்றுக்களில் வெளிப்படுத்தாது செலவினமானது ரூபா மில்லியன் 1,477 பெறுமதியான அச்சொத்துக்கள் நூற்றிற்கு 20 வீதம் பெறுமானத் தேய்வு செய்யப்பட்டிருந்தது.

## 1.5.3 கணக்கீட்டுக் குறைபாடுகள்

பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்படுகின்றன.

| கணக்காய்வு விசாரணைகள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| (அ) வெளி நிறுவனம் ஒன்றிற்கு பெற்றுக் கொடுக்கப்பட்டிருந்த மதிப்பீடு செய்யப்பட்ட காணிகளின் ரூ.159,970,745 பெறுமதியான தொகையினை கணக்குகளில் இருந்து அகற்றாமை காரணமாக நிதிக் கூற்றுக்களில் குறிப்பிடப்பட்டிருந்த மொத்தக் காணிகளின் பெறுமதியானது மேற்படி தொகையால் அதிகரித்துக் காட்டப்பட்டிருந்தது. | 2020 ஆம் ஆண்டிலே சீராக்கம் செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | காணிகளின் பெறுமதியினை சரியாக கணக்குகளில் பதிதல் வேண்டும். |
| (ஆ) 2018 ஆம் ஆண்டிலே வாகனங்களுடன் தொடர்புடையதாக ரூ.22,988,000 பெறுமதியான தொகை பெறுமானத் தேய்வு மீள் மதிப்பீட்டுக் கணக்குகளில் இருந்து தவறுதலாக குறைத்தமை காரணமாக நிதிக் கூற்றுக்களின் மீள் மதிப்பீட்டு இலாபமானது அத்தொகையால் குறைத்துக் காட்டப்பட்டிருந்தது. | 2020 ஆம் ஆண்டிலே சீராக்கம் செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | பெறுமானத் தேய்வினை சரியான முறையில் கணக்குகளில் பதிதல் வேண்டும். |

| | | |
|---|---|---|
| (இ) களனி பல்கலைக்கழக வளாகத்தில் அமைந்துள்ள மக்கள் வங்கி கட்டிடத்திற்காக மீளாய்வு ஆண்டிற்காக 2018 ஆம் ஆண்டிலே கிடைக்கப் பெற்றிருந்த ரூ.2,900,000 பெறுமதியான குத்தகை வருமானமானது கடந்த ஆண்டின் வருமானமாக குறிப்பிடுதல் காரணமாக மீளாய்வு ஆண்டிலே மிகையானது அத்தொகையால் குறைத்துக் காட்டப்பட்டிருந்தது. | இவ்வாறான குறைபாடுகளை எதிர்வரும் காலங்களில் குறைத்துக் கொள்வதற்கு ஆலோசனை வழங்கப்பட்டுள்ளது. | ஆண்டிற்குரி வருமானத்தை சரியாக கணக்குகளில் பதிதல் வேண்டும். |
| (ஈ) வங்கி நடைமுறைக் கணக்கு ஒன்றிலே 2016 மற்றும் 2017 ஆம் ஆண்டு காலப் பகுதி முதல் இருந்து வருகின்ற இனங்காணப்படாத நேரடி வைப்புக்களின் பெறுமதி ரூ.525,000 தொகை இனங்கண்டு கணக்குகளில் சீராக்கம் செய்யப்பட்டிருக்கவில்லை. அவ்வாறே நடைமுறைக் கணக்குகள் இரண்டுடன் தொடர்புடைய 2019 ஆம் ஆண்டிலே இனங்காணப்படாத ரூ.4,356,795 பெறுமதியான 60 நேரடி வைப்புக்கள் இனங்காணப்படாது நானாவித வருமானங்களின் கீழ் கணக்குகளில் பதியப்பட்டிருந்தன. | எதிர்வரும் காலங்களில் வருமானமாகக் கொள்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | நேரடி வைப்புக்களை இனங்கண்டு கணக்குகளில் சீராக்கம் செய்தல் வேண்டும். |

### 1.5.4 கணக்காய்விற்கு எழுத்துமூல சாட்சிகள் கிடைக்கப் பெறாமை

| விடயம் | தொகை ரூபா | வழங்கப்படாத கணக்காய்வு சாட்சிகள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | சிபாரிசு |
|---|---|---|---|---|
| அரசாங்க கொடைகள் மற்றும் உழைத்த வருமானம் | ரூ.மி. 5,642 | 419 நாளேட்டு வவுச்சர்கள் கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட்டிருக்க வில்லை. | சமர்ப்பிக்கப்படவில்லை. | நிதிக் கூற்றுக்களை கணக்காய்விற்காக சமர்ப்பிக்கும் போது 2018 திசெம்பர் 18 ஆம் திகதிய இலக்கம் யுபுபுநெ.ஞநஉ.2018.82 உடைய தேசிய கணக்காய்வு அலுவலகத்தின் சுற்றறிக்கைக்கு ஏற்ப செயற்படுதல் வேண்டும். |

## 1.6 வருமதி மற்றும் சென்மதி கணக்குகள்

### 1.6.1 கிடைக்க வேண்டிய தொகை

பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்படுகின்றன.

| கணக்காய்வு விசாரணைகள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| (அ) குறித்த அமைச்சின் அனுமதியின்றி பல்கலைக்கழக விரிவுரையாளர்களுக்குச் செலுத்திய ரூ.694,603 பெறுமதியான (அமெரிக்க டொலர் 3840) அமய கொடுப்பனவுகள் கணக்காய்வு தினமான 2020 யூன் மாதம் 22 ஆம் திகதி வரையில் அறவிட்டுக் கொள்வதற்கு நடவடிக்கை எடுத்திருக்கப்படவில்லை. | சம்பந்தப்பட்ட பிரிவுகளை விழிப்பூட்டி பணத்தினை அறவிட்டுக் கொள்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | முறையான அனுமதியின் மீது செலவுகளை மேற்கொள்ளல் வேண்டும். |
| (ஆ) மீளாய்வு ஆண்டின் நிதிக் கூற்றுக்களில் நிதிச் சொத்துக்களின் கீழ் குறிப்பிட்டிருந்த ஊழியர் கடன் மீதிகளினுள் ஒரு வருடம் முதல் நான்கு வருடங்களுக்கு மேற்பட்ட கடன் மீதி ரூ.82,561,766 ஆகக் காணப்பட்டதுடன், ஐந்து வருடங்களுக்கு மேற்பட்ட கடன் மீதிகள் ரூ.652,784 ஆகக் காணப்பட்டது. அறவிட முடியாக் கடனாக ரூ.43,652 மாத்திரம் ஒதுக்கப்பட்டிருந்தன. | 05 வருடங்களுக்கு மேற்பட்ட கடன் மீதிகளில் 2020 பெப்ரவரி மாதமாகும் போது செலுத்தி முடிந்த மீதி ரூ.173,407 தொகை, தவணை அறவிடப்பட்டு வருகின்ற மீதி ரூ.101,857, அறவிடப்படாது இருந்து வருகின்ற மீதி ரூ.326,060 மற்றும் ஓய்வுபெற்ற நபர்களிடமிருந்து அறவிட வேண்டியுள்ள மீதி UPF நிதியிலிருந்து விடுவித்துக் கொள்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | கடன் மீதிகளை துரிதமாக அறவிட்டுக் கொள்வதற்கு முகாமைத்துவத்தின் கவனம் செலுத்தப்படல் வேண்டும். |

### 1.6.3 முற்பணம்

| கணக்காய்வு விசாரணைகள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| முற்பணத்தை அதனை வழங்கிய பணி முடிவடைந்த உடனேயே தீர்ப்பதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டியுள்ள போதிலும் 14 சந்தர்ப்பங்களின் போது பெற்றுக் கொடுத்திருந்த ரூ.1,238,950 பெறுமதியான முற்பணமானது ஒரு வருடத்திற்கும் மேலாக தீர்க்கப்படாதிருந்தது. | எதிர்வரும் காலங்களில் அறவிட்டுக் கொள்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | குறித்த பணி நிறைவுற்ற உடனேயே முற்பணத்தினைத் தீர்ப்பதற்கு முறையான கட்டுப்பாட்டு முறைகளை அமுல்படுத்தல் வேண்டும். |

## 1.7 சட்டங்கள், ஒழுங்குவிதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவ தீர்மானங்கள் என்பவற்றுக்கு இணங்காமை

பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்படுகின்றன.

| சட்டங்கள், ஒழுங்கு விதிகள், பிரமாணங்கள் என்பன | இணங்காமை | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் நிதி ஒழுங்கு விதிகள் கோவையின் நிதி ஒழுங்கு விதிகள் 396 | 2016 நவம்பர் 03 ஆம் திகதி முதல் 2019 யூன் 28 ஆம் திகதி வரையிலான காலப் பகுதியினுள் இரத்துச் செய்யப்பட்ட ரூ.1,636,179 பெறுமதியான 287 காசோலைகள் தொடர்பில் நிதி ஒழுங்கு விதிகளின் பிரகாரம் நடவடிக்கை எடுக்காது நிதி நிலைக் கூற்றின் நடைமுறைப் பொறுப்புக்களின் கீழ் குறிப்பிடப்பட்டிருந்தன. | எதிர்வரும் காலங்களில் வருமானமாகக் கொள்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | நிதி ஒழுங்கு விதிகளின் பிரகாரம் வருமானமாகக் கொள்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். |
| (ஆ) நிதி ஒழுங்கு விதிகள் 571 | பல்வேறு விடயங்களுக்காக பல்கலைக்கழகத்தில் வைப்புச் செய்த இரண்டு வருடங்களுக்கு மேற்பட்ட ரூ.64,179,618 பெறுமதியான நானாவித வைப்புக்கள் மற்றும் ஐந்து வருடங்களுக்கு மேற்பட்ட ரூ.11,312,500 பெறுமதியான நூலக வைப்புத் தொகை தொடர்பில் நிதி ஒழுங்கு விதிகளின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | 2020 ஆம் ஆண்டிலே தீர்ப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | வைப்புக்கள் தொடர்பில் நிதி ஒழுங்கு விதிகளின் பிரகாரம் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

## 2. நிதி மீளாய்வு

### 2.1 நிதி பெறுபேறு

மீளாய்வு ஆண்டின் தொழிற்பாட்டு பெறுபேறு ரூ. மில்லியன் 690.4 தொகை மிகை ஒன்றினை கொண்டிருந்ததுடன், அதற்கு மாறாக கடந்த ஆண்டின் மிகையானது ரூ. மில்லியன் 613.9 ஆகக் காணப்பட்டது. அதன் பிரகாரம், நிதி பெறுபேறுகளில் ரூ. மில்லியன் 76.5 பெறுமதியான விருத்தி ஒன்றினை அவதானிக்கக் கூடியதாக இருந்தது. இவ்விருத்திக்கு ஆளுக்குரிய வேதனாதிகள் ரூ. மில்லியன் 797 தொகையினால் அதிகரித்தமைக்கு மாறாக அரசாங்கத்தின் மீண்டுவரும் கொடைகள் ரூ. மில்லியன் 745 தொகையால் மற்றும் உள்ளக வருமானம் ரூ. மில்லியன் 168 தொகையால் அதிகரித்தமை பிரதானமாக தாக்கம் செலுத்தி இருந்தன.

## 3. தொழிற்பாட்டு மீளாய்வு

### 3.1 முகாமைத்துவ வினைத்திறன் இன்மை

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
| --- | --- | --- |
| சொத்துக்களின் பாதுகாப்பு மற்றும் நிருவாகம் என்பன பலப்படும் வகையில் 2007 ஆம் ஆண்டின் பின்னர் நிலையான சொத்துக்கள் ஆவணத்தை இற்றைப்படுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | 2020 ஆம் ஆண்டிலே நிலையான சொத்துக்கள் ஆவணத்தைத் தயாரிக்குமாறு உரிய பிரிவுகளுக்கு விழிப்பூட்டப்பட்டுள்ளன. | ஆவணத்தை முறையாக பேணி வருவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

### 3.2 தொழிற்பாட்டு வினைத்திறன் இன்மை

பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்படுகின்றன.

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
| --- | --- | --- |
| (அ) பல்கலைக்கழகத்தின் வெளி விரிவுரையாளர்களின் உள் வருகை மற்றும் வெளிச் செல்லல் என்பன சரியான முறையில் உறுதிப்படுத்திக் கொள்ளாது மீளாய்வு ஆண்டு காலப் பகுதியினுள் ரூ.24,849,209 தொகை செலுத்தப்பட்டிருந்தது. | தற்போது உள் வருகை மற்றும் வெளிச் செல்லல் என்பவற்றினை உறுதிப்படுத்திக் கொள்வதற்காக ஆவணமொன்று பேணி வரப்படுகின்றது. | உள் வருகை மற்றும் வெளிச் செல்லல் என்பவற்றினை பதிவதற்கு முறையான திட்டம் ஒன்றினை கடைபிடித்தல் வேண்டும். |
| (ஆ) பட்டப்பின் படிப்பு மற்றும் கலாநிதி பட்டப் படிப்பு என்பவற்றிற்காக 2011 ஆம் ஆண்டு முதல் வெளிநாடுகளுக்குச் சென்ற விரிவுரையாளர்கள் 22 பேர் மீண்டும் கடமைக்கு சமுகமளிக்காமை காரணமாக பிணை ஒப்பந்தத்தை மீறியமை மூலம் மீளாய்வு ஆண்டின் திசெம்பர் 31 ஆம் திகதியன்று ரூ.97,259,926 தொகை அறவிட வேண்டி காணப்பட்டது. அவ்வாறே அனுபவமிக்க மற்றும் தகைமையுடைய விரிவுரையாளர்கள் வெளிநாடுகளுக்குச் சென்று மீண்டும் வருகைத் தராமையால் அந்த அறிவினை பல்கலைக்கழகத்திற்கு பெற்றுக்கொள்வதற்கான வாய்ப்பு கிடைக்காமல் போயிருந்தது. | நிருவாகச் சபையின் அனுமதியின் மீது கல்விசார் பதவியணிக்கு தமது பட்டப்பின் படிப்பு தகைமைகளைப் பூர்த்திசெய்து கொள்வதற்கு கல்விசார் விடுமுறை சிபாரிசு செய்யப்படும். | பிணை ஒப்பந்தங்களை மீறியதன் காரணமாக அறவிடப்பட வேண்டிய பணத்தினை அறவிட்டுக் கொள்வதற்கு முகாமைத்துவத்தின் கவனம் செலுத்தப்படல் வேண்டும். அத்துடன் வெளிநாடுகளுக்குச் சென்றுள்ள விரிவுரையாளர்களை மீள அழைப்பதற்கான முறைமை ஒன்றினைத் தயாரித்தல் வேண்டும். |
| (இ) பட்டப்பின் படிப்பு தகைமைகளைப் பூர்த்தி செய்வதற்காக முழுமையான சம்பளம் மற்றும் கொடுப்பனவுகள் என்பவற்றுடன் கூடிய கற்கை விடுமுறை மற்றும் | இரண்டு விரிவுரையாளர்கள் பட்டப்பின் படிப்பு தகைமையினைப் பூர்த்தி செய்வதற்கு களனி பல்கலைக்கழகத்தில் பதிவு செய்துகொண்டுள்ளனர். | விரிவுரையாளர்களினால் கலாநிதி பட்டப் படிப்பினை உரிய காலப் பகுதியிலேயே பூர்த்தி செய்து தகைமையினைப் |

| | | |
|---|---|---|
| மூலதனக் கொடைகள் என்பவற்றினைப் பெற்றுக் கொடுத்து வெளிநாடுகளுக்குச் சென்ற 5 விரிவுரையாளர்கள் அத்தகைமையினைப் பூர்த்தி செய்யாது கடமைக்குத் திரும்பியமை காரணமாக விரிவுரையாளர்களின் அறிவின் மூலம் கல்வியின் நற்தன்மையினை மேம்படுத்தும் அடிப்படை நோக்கம் நிறைவேற்றப்பட்டிருக்கவில்லை என்பது கணக்காய்வின் போது அவதானிக்கப்பட்டது. | ஏனைய மூன்று விரிவுரையாளர்களும் கலாநிதி பட்டப் படிப்பினை பயின்று வருவதாகக் குறிப்பிடப்பட்டுள்ளது. | பூர்த்திசெய்து கொள்வதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

## 3.3 நிதி குறை பயன்பாடு

--------------------------------

பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்படுகின்றன.

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| (அ) 2019 திசெம்பர் 31 ஆம் திகதியன்று நிதியத்தின் 04 கணக்குகளில் இருந்த கூட்டுத் தொகை ரூ.1,628,462 தொகை 02 வருடங்களுக்கும் மேலாக உரிய நோக்கங்களுக்காக பயன்படுத்தாது இருந்தது. அவ்வாறே பாலி மற்றும் பௌத்த கற்கைப் பிரிவில் வெளிநாட்டு மாணவர்களுக்காக விடுதி ஒன்றினை நிர்மாணிப்பதற்காக 2011 மற்றும் 2013 ஆண்டு காலப் பகுதிகளில் கிடைக்கப் பெற்றிருந்த மொத்தம் ரூ.6,450,758 பெறுமதியான கொடை நிதித் தொகை குறித்த நோக்கத்திற்காகப் பயன்படுத்தாதுகுறை பயன்பாட்டு நிலையில் காணப்பட்டது. மேலும் One Asia Foundation நிகழ்ச்சித் திட்டத்திற்காக கிடைக்கப் பெற்ற கொடைத் தொகையில் மீதமாகவுள்ள ரூ.205,589 தொகையானது இரண்டு வருடங்களுக்கும் மேற்பட்ட காலமாகவும் பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவிடம் இருந்து பெறப்பட்ட ரூ.4,149,700 தொகை மற்றும் சர்வதேச மாநாடுகள், செயலமர்வுகள் என்பவற்றிற்காக பெற்றுக்கொண்ட தொகையில் மீதமாக இருந்த ரூ.6,907,764 தொகை என்பன மீளாய்வு ஆண்டுக் காலப் பகுதியினுள் குறை பயன்பாடு உடையதாகக் காணப்பட்டது. | விடுதிக்காக கிடைக்கப் பெற்றிருந்த ரூ.6,450,758 தொகைக்காக அமைச்சின் அனுமதி கிடைக்கப் பெறவில்லை. மீதி நிதி தொடர்பில் எதிர்வரும் காலங்களில் உரிய நடவடிக்கை எடுக்கப்படும். | நிதியத்தை நிறுவும் நோக்கத்திற்காக நிதியினை பயன்படுத்துவதற்கு திட்டமிட வேண்டும். |

| | | |
|---|---|---|
| (ஆ) 2019 திசெம்பர் 31 ஆம் திகதியன்று பல்கலைக்கழகத்தின் நிதிக் கூற்றுக்களில் காணப்படுகின்ற 10 புலமைப் பரிசில் நிதியங்களின் மற்றும் 11 பரிசில்கள் நிதியங்களின் மொத்த கூட்டுத் தொகை ரூ.5,720,965 ஆன முதலீடுகளில் 2019 திசெம்பர் 31 ஆம் திகதி வரையில் கிடைக்கப் பெற்றிருந்த ரூ.7,730,800 பெறுமதியான வட்டி வருமானம் குறித்த நோக்கத்திற்காக பயன்படுத்தாது குறை பயன்பாட்டு நிலையில் காணப்பட்டது. | தொழிற்படாது காணப்படுகின்ற புலமைப் பரிசில் மற்றும் நன்கொடை நிதியம் தொடர்பில் எதிர்காலத்தில் நடவடிக்கை எடுக்கப்படும். | நிதியத்தை நிறுவும் நோக்கத்திற்காக நிதியினை பயன்படுத்துவதற்கு திட்டமிடல் வேண்டும். |
| (இ)பல்கலைக்கழக விரிவுரையாளர்களுக்கான நன்நெறி முறைமைக்கேற்ப மாணவர்களை அபிவிருத்தி செய்தல் மற்றும் கற்பித்தல் அடிப்படை நோக்கமாக அமைவதனால் அனைத்து விரிவுரையாளர்களும் அடிக்கடி ஆராய்ச்சி நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டியுள்ள போதிலும் அந்த ஆராய்ச்சிகளை மேற்கொள்வதற்காக கிடைக்கப் பெற்றிருந்த கூட்டுத் தொகை ரூ.8,096,327 பெறுமதியான 29 நிதியங்களில் நிதி ஒரு வருடத்திற்கும் மேற்பட்ட காலப் பகுதிக்கு பயன்படுத்தப்படாதிருந்தது. | தொழிற்படு நிலையில் இல்லாத ஆராய்ச்சிகள் தொடர்பில் பொருத்தமான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும். | ஆராய்ச்சிப் பணிகளுக்காகக் கிடைக்கப் பெற்ற நிதியினைப் பயன்படுத்தி பல்கலைக்கழகத்தின் செயலாற்றுகையை அதிகரிப்பதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

### 3.4 தொழிற்படா அல்லது குறை பயன்பாட்டு ஆதனங்கள், பொறித் தொகுதி மற்றும் உபகரணங்கள்

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| நாடகம் மற்றும் படங்கள் கலைப் பிரிவின் கலைக்கூடத்திற்கு 2017 சனவரி 27 ஆம் திகதி கொள்வனவு செய்த ரூ.9,929,568 பெறுமதியான புகைப்படக் கருவி, தொலைக்காட்சி மற்றும் கணினி இயந்திரங்கள், 2016 ஆம் ஆண்டிலே கிடைக்கப் பெற்றிருந்த செலவினமான ரூ.4,124,830 பெறுமதியான 5 கெமராக்கள் மற்றும் 7 கணினி இயந்திரங்கள் என்பன அந்த ஆண்டுகளில் இருந்து கணக்காய்வு தினமான 2020 யூன் 26 ஆம் திகதி வரையிலும் பயன்படுத்தாது காணப்பட்டது. | கலைகூடத்தின் நிர்மாணப் பணிகள் முடிவடைந்ததன் பின்னர் இந்த உபகரணங்களை பயன்படுத்துவதற்கு உத்தேசிக்கப்பட்டுள்ளது. | நிர்மாணப் பணிகள் முடிவுற்றதன் பின்னர் திட்டமிட்டு கொள்வனவுப் பணிகளை மேற்கொள்வதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

## 3.5 மனிதவள முகாமைத்துவம்

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
| --- | --- | --- |
| மீளாய்வு ஆண்டின் திசெம்பர் 31 ஆம் திகதியன்று பல்கலைக்கழகத்தின் 06 பீடங்களில் அனுமதிக்கப்பட்ட மற்றும் உண்மை பதவியணியானது முறையே 728 மற்றும் 636 ஆகக் காணப்பட்டது. அதன் பிரகாரம் 142 வெற்றிடங்கள் நிலவிய போதிலும் 148 விரிவுரையாளர்கள் ஏழு வருட மற்றும் கற்கை விடுமுறைகள் பெற்றுள்ளமையால் 12,028 பேருக்கு கல்வி கற்றுக்கொடுப்பதற்காக 494 விரிவுரையாளர்கள் மாத்திரம் சேவையில் அமர்த்தப்பட்டிருந்தனர். அதன் பிரகாரம் மாணவர்களுக்கு நற்தன்மைமிக்க கல்வியை பெற்றுக்கொடுப்பதற்கு போதிய கல்விசார் பதவியணியொன்று சேவையில் இல்லை என்பது கணக்காய்வின் போது அவதானிக்கப்பட்டது. | மாணவர்களின் கற்கை நடவடிக்கைகளுக்கு பாதிப்பு ஏற்படாதவாறு ஏழு வருட மற்றும் கற்கை விடுமுறைகள் பெற்றுக் கொடுக்கப்படுகின்றன. | துரிதமாக வெற்றிடங்களை நிரப்புவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |